Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Theosophical Philosophy in *Tembavani*

**P. Devadoss**, Research Scholar of Tamil, Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0733-7322
DOI: 10.5281/zenodo.6621382

## Abstract

*Veeramamuni came to Tamil Nadu to explain the Christian principles to the people of Tamil Nadu and studied Tamil grammar well. He loved the Tamil epics and wanted to create an epic for the life and teachings of Jesus Christ. He created 'Thembavani" with the special features of the epic tradition in Tamil about the Lord with the reference to biblical thoughts. The article describes the presentation of Christian doctrines found in the work Tembavani to the Tamil academia and the explanation of the almighty Jesus Christ. The article will benefit from knowing the Christian theosophical doctrines from the work of Tembavani.*

**Keywords:** *Tembavani*, Theosophy, Philosophy.

## References

[1] Mariaantony .V. *Veeramamunivar in Tempavani Kappiam*, Jaint Saveriar College, Palayangottai, Tirunelveli.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தேம்பாவணியில் இறைத் தத்துவ மாண்புகள்

பி. **தேவதாஸ்,** முனைவர் பட்ட ஆய்வாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0733-7322**
**DOI: 10.5281/zenodo.6621382**

**ஆய்வுச்சுருக்கம்**

*கிறித்தவமதக் கொள்கைகளை தமிழக மக்களுக்கு எடுத்துரைக்க தமிழகம் வந்த வீரமாமுனிவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார். பின் தமிழ்க் காப்பியங்களைப் போல இயேசு பெருமானின் சிறப்புகளையும் விவிலியச் சிந்தனைகளைக் காப்பிய அமைப்போடு தேம்பாவணியாகப் படைத்தார். தேம்பாவணியில் கிறித்தவ சமயக் கொள்கைகளை தமிழ் மக்களுக்கு காப்பிய நடையில் எடுத்துரைக்கும் பாங்கும், இயேசுவின் மகிமையால் பழமை நோய் அகழ்வதும் இறைவனே நன்மை தருவார் என நம்புவோருக்கு இயேசு பெருமானால் நன்மை உண்டாகும் என்ற விளக்கமும் கட்டுரையாக விளக்கப்பட்டுள்ளன. திறவுச்சொற்கள் – விவிலியச்சிந்தனைகள், இயேசு கிறிஸ்துவின் பெருமை, தேம்பாவணி உணர்த்துதல்.*

**திறவுச்சொற்கள்:** *தேம்பாவணி*, இறைத்தத்துவம், மாண்புகள்.

**முன்னுரை**

இறைவனின் அருளிச் செயல்கள் புனிதம், புதுமை நோக்கிய செயலக்ளில் எடுத்தாளப்பட்டுள்ளன. தேம்பாவணிக் காப்பியத்தில் இறையியல் நிகழ்வுகள் வாயிலாக கிறித்தவ இறையியல் தத்துவ மாண்புகள் திருவிவிலியத்தை ஒட்டியே பதிவு செய்யப்பட்டுள்ளன. தொன்மக் கதைகள் வாயிலாக இறைத் தத்து மரபுகளின் பெருமையினைக் காப்பிய மரபையொட்டி விளக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் அரிய செயல்களைக் கதை வாயிலாக பெருமைப்படுத்தும் கிளைக்கதைகள் காப்பிய வடியொற்றி விளக்கப்பட்டிருப்பதை விளக்கப்படுகிறது.

**மன்னா உணவாதல்**

இசுரவேலர் பாலைவனத்தில் அலைந்து கொண்டிருந்த அக்காலத்தில் உண்ண உணவின்றி இருந்தனர். ஒவ்வொருவனும் தான்தான் நினைந்தவாறு சுவை இன்பத்தைப் பல விதமாய்த் தந்ததும், இன்னதென்று கருத இயலாததும், சிறிய வடிவுள்ளதுமான ஒரு சிறந்த தெய்வ உணவைப் பலநாள் கடவுள் அப்பொழுது அவர்களுக்குத் தந்தார். அவ்வனத்தில் ஒரு கோடிபேர் துன்பமும், அண்டும் நோயும் ஒன்றும் இல்லாமல் வாழ்ந்து அவ்வுணவை இன்பமாய் உண்டனர்' என்ற இயேசுவின் மகிமையை மன்னா உணவாதல் நிகழ்வின் மூலமாக மகிழ்வினைப் படலத்தில் கூறப்பட்டுள்ளது. இதனை,

**அன்னார் அந்நாள் அவ் வனவாய் வந்து அமுது இன்றி**
**நல்நாள். தன்னால் உள்ளிய இன்பம் பல ஈந்த ஓர்**
**உன்னா நுண் மாதே ஆவி, தந்து, ஆங்கு ஒரு கோடி**
**இன்னா துன் நோய் ஒன்று இல வாழ்ந்தே இனிது உண்டார் (பா.எ. 64)**

என்ற பாடல் உணர்த்துகிறது. மன்னா உணவாதல் தொன்மம் தேம்பாவணி காப்பியம் முழுமையிலும் இவ்விடத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. ஆனால், பழைய ஏற்பாட்டில் இச்செய்தி, “இஸ்ரவேல்

புத்திரராகிய சபையர் எல்லாரும் ஏலிமைவிட்டுப் பிரயாணம் பண்ணி.... இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்; நீ அவர்களோட பேசி, நீங்கள் சாயங்காலத்தில் இறைச்சியைப் புசித்து இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானன் தேசத்தின் எல்லையில் சேரும் வரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள்" என இடம்பெற்றுள்ளது. இயேசுவே அப்பத்தின் வடிவில் தம் உடலையே தம் அடியார்களுக்கு உண்ணக் கொடுக்கும் தன்மையில் அமைந்துள்ளது. துன்பக் காலத்தில் இன்பத்தைத் தம் அடியவர்களுக்கு வழங்குபவராக இறைவன் இருக்கிறார் என்பதை இக்கதை எடுத்துரைக்கின்றது.

தீயவரை நல்வழிப்படுத்தல்

தீய வழியில் செல்லும் ஒருவரை நல்வழிப்படுத்த வேண்டுமெனில் அவர் செய்த அத்தீய செய்கையினை முதலில் உணர்த்த வேண்டும். அதனையும் அவர் உணரவில்லை என்றால் அவரைக் கண்டிக்க வேண்டும். அதனையும் பொருட்படுத்தவில்லையெனில்; அவருக்கும் அவரைச் சார்ந்தோரும் பல இன்னல்களை அனுபவித்தே ஆக வேண்டும் என்ற தத்துவத்தை இந்நிகழ்வு எடுத்துரைக்கிறது. மோயீசன் அச்சுறுத்தல் இளவல் மாட்சிப் படலத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை,

**'ஒளியிற் சொன்ன யாவு முணர்ந்தமோ யிசன் போய்க் கூற**

**...நீளெயிற் றழலுங் கட்பீ நிறையவிட் டுடற்றிற் றன்றோ'**

எனவும்,

**'வேத்திரம் ஆய தன்மை வேந்து கண்டு அஞ்சினானே'**

எனவும்,

**'சொல்லிய விசையில் ஏந்தும் சூரலைச் சுழற்றி நிற்ப,**

**...புல்லிய புனல்கள் யாவும் புண்ணின் நீர் ஆயிற்று அன்றோ' (பா.எ. 26, 27, 29)**

எனவும் வருகின்ற பாடல்கள் உணர்த்துகின்றன. 'ஆண்டவன் சொன்ன எல்லாவற்றையும் ஒழுங்காக உணர்ந்துகொண்ட மோயிசன் பேய் அரசனிடம் அவற்றைக் கூறினான். கூறியும், யாளி போன்ற மன்னன் அதனைக் கேட்டு நடவாது போனான். எனவே, அங்கு அம்மோயீசன் எறிந்த பிரம்பு ஒளியுள்ளம் பல்லால் கொல்லும் செந்நிறப்பாம்பு வடிவம் எடுத்து தலை நிமிர்ந்து, படமெடுத்து அங்கு ஆடியது. தன் நீண்ட பற்களினின்று பிறந்த நெருப்பையும் கண்ணினின்று நிறைவாக எழுந்த தீயையும் பாய விட்டுச் சீறி நின்றது.

சாத்திர அடிப்படையில் அமைந்த மாயவித்தைத் தன்மை கொண்ட எசித்தியரும் அதுபோலவே பற்பல பிரம்புகளைக் கொண்டு பாம்புகளை உருவாக்கிக் காட்டினார். அவர்கள் காட்டிய பாம்புகளைத் தெய்வ சூத்திரத்தில் முன் தோன்றிய பாம்பு விழுங்கியது. மோயீசன் தொடர்ந்து இப்பாம்பின் வாலைப் பிடித்துத் தூக்கவே அது மீண்டும் பிரம்பாகியது. எசித்து மன்னன் அத்தன்மை கண்டு அஞ்சினான். அவ்வாறு அஞ்சினான் எனினும், அதன் மூலம் யூதரின் தெய்வ வழிபாட்டிற்கு இடந்தராத நெஞ்சம் படைத்த அம்மன்னன் தன் கொடுமையின் வேகத்தைத் தணிக்கும்பொருட்டு, நீரில் தோன்றும் நெருப்புப் போன்ற தாமரை மலரில் அன்னம் உறங்கி வாழும் ஒரு தடாகத்தை நோக்கிப் போகையில், மோயிசன் குறுக்கிட்டு, 'நான் சொன்னவற்றிற்கு இணங்க மறுப்பாயானால், முடிவில்லாத துயரத்தில் மூழ்குவாய்' என்று சொல்கின்றான். அவ்வாறு சொல்லிய வேகத்தோடு, தன் கையில் ஏந்தும் பிரம்பை மோயீசன் சுழற்றி நிற்கவே, தேனுள்ள மலர்கள் வாடவும், மீன் இனங்கள் தளர்ந்து மடியவும், நீர் நூல் வல்லோர்

மயங்கவும், எல்லோரும் உண்பதற்குரிய நீர் இல்லாமல் சோரவுமாக அந்நாட்டிற் பொருந்திய நீர்நிலைகள் எல்லாம் இரத்தமாயின' என்று கூறி விளக்குகிறது.

**இறைவன் ஒளி வடிவானவன்**

நல்லோர்களுக்கு இறைவன் ஒளி வடிவமாய் காட்சி தருவான் என்பதை மோயீசன் காண் மரக்கதை வாயிலாக, கருணையன் மாட்சிப் படலத்தில்,

**'மின்னின் மின்னிய வேள்வியின் தீ எனா**
**வன்னி மின்னிய வாள் முகம், தண்ணமே**
**துன்னி மின்னிய தூய் உளம் தீச்சுடர்**
**மின்னின் மோயிசன் காண் மரம் ஒத்ததே' (பா.எ. 151)**

எனவரும் பாடலில் கூறப்படுகிறது. இவற்றில், மின்னல் போல் மின்னிய வேள்வித் தீ போல நெருப்பு மயமாய் மின்னிய ஒளி பொருந்திய முகத்தோடு, குளிர்ச்சி செறிந்து உள்ளே மின்னிக் கொண்டிருந்த கருணையனின் தூய்மையான உள்ளம் முன் ஒரு காலத்தில் மோயீசன் தீச்சுடரைக் கண்ட மரத்தை ஒத்திருந்தது என்பதில் இறை மாண்பு கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இத்தொன்மம், "மோசே மீதியான் தேசத்து…. அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்…. அது வெந்து போகாமல் இருந்தது…. முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி, மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன், இதோ அடியேன் என்றான்" என இடம்பெற்றுள்ளது.

**பாவங்கள் போக்குபவன் இறைவன்**

மக்களின் பாவங்களைப் போக்கி வளமுடன் வாழ வைக்க இயேசு பிறந்தார் என்ற மகிமையைக் கூறுவதற்கு யாக்கோபு ஏணி இறையியல் நிகழ்வு பிரிந்த மகவைக் காண் படலத்தில் உணர்த்தப்படுகிறது. இதனை,

**'என்மேல் இழிந்து எழுந்து உலவ, இயாக்கோபன்**
**கண்மேல் அறிவில் இங்கு ஏணி கண்டனன் ஆல்'**

எனவும்,

**'அன்ன பிள்ளை நான்; அன்ன ஏணியும் நான்**
**இன்ன நகரிடை இறக்கும் மரம் தானே;**
**சொன்ன முறையில், ஈர் உலகும் தொடர்ந்து ஒன்றாய்**
**மன்ன, மகிழ்வு உற மாள்வேன் நான் என்றான்' (பா.எ. 9, 12)**

எனவும் வருகின்ற பாடல் விளக்குகிறது. இவற்றில், 'என் தந்தையாகிய கடவுள் ஏணியின் அடியைத் தரை மேல் வைத்து அதன் முடியைத் தம் வலக்கையால் வானத்தில் விருப்பத்தோடு தாங்கி நிற்கவும், எண்ணுக்கு அடங்காத வானவர் வந்து அதன் மீது இறங்கியும் ஏறியும் உலாவிய வண்ணமாக யாக்கோபு என்பவன் இவ்விடத்தில் தன் கண்ணுக்கு மிஞ்சிய தெய்வக் காட்சி அறிவால் ஓர் ஏணியைக் கண்டான்.

புகழுக்கெல்லாம் மேம்பட நின்ற அத்தெய்வீகக் காட்சியின் சிறப்பைக் கருதி, கருமேகத்தின் மீது அசைந்தாடிய கொடியைக் கொண்டுள்ள அழகிய கோபுர உச்சியோடு அழகுக்கெல்லாம் மேம்பட நின்ற ஒளியைக் கொண்ட மாணிக்கங்களைப் பதித்துப் பரந்த இக்கோயில் இம்மண்ணின் மீது அமைக்கப்பட்டது. முன்னே குறித்த யாக்கோபன் இவற்றை இவ்விடத்தில் காட்சியாகக் கண்டபோது, 'நீ முற்றிலும் மகிழுமாறு பிற்காலத்தில் உனது இனத்தில் உதிக்கும் ஒரு பிள்ளையின்

அருளால் உனக்கு ஒளி தழைக்க, நீ இன்று கண்டதெல்லாம் அவனே முடித்து வைப்பான் என்று இறைவன் அன்றே அவனுக்குச் சொன்னான்'.அத்தகைய பிள்ளை நானே. அத்தகைய ஏணியும் நான். இந்த நகரத்தில் இறக்கப்போகும் சிலுவை மரமே ஆகும். இவ்வாறு முன் யாக்கோபுக்குச் சொன்ன முறைப்படி, மண்ணும் விண்ணுமாகிய இரண்டு உலகங்களும் தொடர்ந்து ஒன்றாய் நிலைபெறுமாறு நான் அம்மரத்தில் மகிழ்ச்சியோடு இறப்பேன் என்றான்' என்று இறைத்தன்மை கூறப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், "யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு..... அங்கே அவன் ஒரு சொப்பனங் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதன் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவ தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகின்றவர்களுமாய் இருந்தார்கள். அவன் பயந்து இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது. இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல. இது வானத்தின் வாசல் என்றான்? என இடம்பெற்றுள்ளது". மக்களின் பாவங்களைப் போக்குவதற்கு இறைவன் தானே பூமியில் மனிதனாய் அவதரிக்கப்போகிறேன் என்பதை முன்பே யாக்கோபுவின் கனவில் கூறினார். இப்பூமியில் ஏணியாக இருந்து மக்களை ஈடேற்ற இயேசு பெருமான் அவதரித்தார் என்பதை எடுத்துக்கூற இத்தொன்மம் கூறப்பட்டுள்ளது.

**தீய விளைவு நீக்கப்படல்**

கடவுளின் கட்டளையை மீறி செயல்பட்டதால் உண்டாகும் தீய விளைவுகளை விளக்கவே இத்தொன்மக் கதை எடுத்தாளப்பட்டுள்ளது. இருப்பினும் இறைச் செயலால் மீண்டும் அத்தீய விளைவு நீக்கப்பட்டது.

இயோனாசு விழுங்கப்பட்ட கதை ஈரறம் பொருத்து படலத்தில் இடம்பெற்றுள்ளது.

**'காவி உண்ட அருட்கண்ணினார் முகமன் நோக்கலின், ஆங்கு**
**ஆவி உண்ட சாவு அதைக் கடிது உமிழ்ந்ததே அமலன்**
**ஏவியும் தவிர்த்து ஏகிய இயோனாசு என்றவனைத்**
**தாவி உண்ட பின் தந்தன திமிங்கிலம் போன்றே' (பா.எ. 69)**

என்று விளக்கப்படுகிறது. இதில், குற்றமற்றவனாகிய ஆண்டவனே நினிவே நகர் செல்லுமாறு தன்னை ஏவியிருந்தும், அதனைத் தவிர்த்து வேறிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இயோனாசு என்றவனைப் பாய்ந்து உண்ட பின் மீண்டு உமிழ்ந்து தந்த திமிங்கிலம் போல் கருங்குவளை மலரை வென்ற அருள் கொண்ட கண்களை உடைய சூசையும் மரியாளும் ஆர்வத்தோடு நோக்கவே, அங்கு ஒருவனது உயிரை உண்ட சாவு விரைவில் அதனை மீண்டும் உமிழ்ந்து தந்தது என்றுரைக்கிறது.

பழைய ஏற்பாட்டில், "அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி.... யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோன இராப்பகல் மூன்று நாள் இருந்தான்" என இடம்பெற்றுள்ளது. "அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி.... கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார். அது யோனாவைக் கரையிலே கக்கி விட்டது" எனவும் இடம்பெற்றுள்ளது. இயோனாசு என்றவனைப் பாய்ந்து உண்டபின் மீண்டும் உமிழ்ந்த திமிங்கலம் போல் ஒருவனது உயிரை உண்ட சாவு விரைவில் அதனை மீண்டும் உமிழ்ந்தது என்பது இறையியல் மாண்பைப் போற்றுகிறது. உயிரின் மீது கருணை வைத்தல் 'முனிவர்களின் தன்மையை உலகிற்கு உணர்த்தும்பொருட்டு இத்தொன்மம் இடம்பெற்றுள்ளது. முற்றும் உணர்ந்த முனிவர்களின் கோபத்திற்கு ஆளானவர்கள் அதிலிருந்து மீள முடியாது. அதே நேரத்தில் இறைவனுக்கு அடுத்த நிலையில் மனித வடிவில் உலவும்

முனிவர்கள் ஓர் உயிரின் மீது கருணை வைத்தால் அதன் மகத்துவம் அளப்பரியது' என்பதை எடுத்துக்காட்ட இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. விதவையின் மகனை உயிர்ப்பித்த நிகழ்வு பாலைபுகு படலத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை,

**'கொழு கொம்பு இழந்த கொடி அன்ன, கொழுநன் இழந்த இளங் கைமை**
**செழு கொம்பு அன்ன ஊன்றுதற்குத் திதியின் நின்ற ஓர் மகனும்**
**விழு கொம்பு அன்ன வீழ்ந்து இறந்து விம்மி அழும் தாய் நனி உவப்ப,**
**எழு கொம்பு அன்ன, அம்மகனை எழுப்பித் தந்த மாமுனியே' (பா.எ. 30)**

என்ற பாடலில் கூறப்படுகிறது. 'கொழுங் கொம்பை இழந்த கொடி போலத் தன் கணவனை இழந்த இளங்கைம்பெண், செழுமையான கொம்பு போல் தான் ஊன்றி நடப்பதற்கு உறுதிநிலை போல நின்ற ஒரே மகனும் விழுந்த கொம்பு போல் நோயில் விழுந்து இறக்கக் கண்டு விம்மி அழுதாள். அத்தாய் மிகவே மகிழுமாறு, முளைத்தெழுந்து கொம்பு போல் அம்மகனை எழுப்பித் தந்த மாமுனிவன் எலியாசு ஆவான்' என இறையியலின் மகத்துவம் கூறப்படுகிறது.

**முடிவுரை**

இயேசுவின் மகிமையால் உண்ண உணவு கிடைத்தது என்பது இறைவன் மீது நம்பிக்கை கொண்டு முiயாக வாழ்ந்தால் முழுப் பயனை அடைய முடியும் என்ற இறை மாண்பு காப்பியத்திற்குள் உணர்த்தப்படுகிறது. மனிதகுலம் பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது. அவ்வாறு செய்தால் இறைவனால தண்டிக்க நேரிடும் என்பதை மனித இனம் இன்னல்கள் இன்றி வாழ்வதற்கு ஏற்ற மாண்பாகிறது. இறைவன் என்ற பெரும் சக்தி மனித இனத்திற்கு ஏதெனும் ஒரு வடிவில் காட்சி தரப்படுவதைக் காப்பியம் உணர்த்துகின்றது. மனிதம் தழைத்தோங்கும் மாண்புகளை கிறித்தவ இறையியல் மாண்புகளாகத் தேம்பாவணி விளக்கி உணர்த்துகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] மரிய அந்தோணி, வி. *வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணிக் காப்பியம்*. வீரமாமுனிவர் ஆய்வுக்கூடம், புனித சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.